23rd August 1961]

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) The running of the Madras State Transport services was not paralysed.

(இ) & (உ) However, as a result of some altercations between certain college students and conductors on 2nd and 3rd February 1961, the drivers and conductors had certain apprehensions in their minds on 4th February 1961 and could therefore take out the buses for passenger traffic only at 7-30 a.m. that day, after considerable persuasion.

SRI M. KALYANASUNDARAM: மாணவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் இம்மாதிரி ஒரு தகராறு ஏற்படுவதற்குக் காரணம் மாணவர்களுக்கு போதிய பஸ் வசதி இல்லை என்பதுதானா? அப்படியானால் அவர்களுக்கு பஸ் வசதியை அதிகரிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: மாணவர்கள் காலேஜ் போவதற்கு 14 பஸ்கள் போட்டிருக்கிறோம். சர்க்கார் பஸ் நடத்துகிற எந்த தேசத்திலும் இம்மாதிரி மாணவர்களுக்கு ஸ்பெஷல் பஸ் வசதி கிடையாது. இது ராத்திரி சினிமாவுக்கு போகும்பொழுது ஏற்பட்டது என்று நினைக்கிறேன். (சிரிப்பு). அதற்கு நாம் பஸ்கள் தயார் செய்வது என்று சொன்னால் கஷ்டம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI K. VINAYAKAM: Is it not a fact that this clash between the students and the conductor arose not on account of paucity of buses, but on account of the silly behaviour on the part of both the parties concerned?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, Government do not express opinions.

Tahsildar (Pattukottai)

DEPUTY SPEAKER: As the hon. Member who gave notice of question No. 1343 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*1343 Q.—SRI A. R. MARIMUTHU: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா கலெக்டரிடமிருந்து பட்டுக்கோட்டை தாலுக்காவிற்கு ஒரு அசைன்மெண்ட் தாசில்தார் நியமனம் செய்யப்படவேண்டும் என்று கோரிக்கை வந்ததா? என்ன செய்யப்பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.